بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மகத்துவமிக்க சஹாபா ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா அவர்கள் பத்ர் போர் மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். அவர்களுக்கு மிகப்பெரிய அந்தஸ்து இருந்தது. அல்லாஹ் அவர்களது முடிவை சிறந்ததாக ஆக்கினான். அவர்களது தகுதியை நிலைத்திருக்கச் செய்தான். அல்லாஹ் அவர்களின் தகுதியை உயர்த்திக் கொண்டே செல்வானாக**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14 டிசம்பர் 2018 அன்று ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

சஹாபாக்களின் நற்கூற்றில் இன்று ***ஹஸ்ரத் மிஸ்தாஹ் பின் உஸாஸா*** பற்றி கூறுவேன். இவர்களின் பெயர் அவ்ஃப் ஆகும். மேலும் அன்னாரது சுட்டுப்பெயர் மிஸ்தாஹ் ஆகும். இவர்களது தாயாரின் பெயர் உம்மே மிஸ்தாஹ் ஸல்மா பின்த் சகர் ஆகும். இவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய சிற்றன்னை ரேதா பின்த் சகரின் மகள் ஆவார்.

ஹஸ்ரத் மிஸ்தாஹ் அவர்கள் பத்ர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹிஜ்ரத்திற்கு எட்டு மாதங்கள் கழித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை 60 அல்லது ஓர் அறிவிப்பின்படி 80 வசனங்களுடன் அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உபைதா பின் ஹாரிஸ் அவர்களிடம் ஒரு வெள்ளைக் கொடியைக் கட்டி விட்டார்கள். இந்தக் கொடியை மிஸ்தாஹ் தூக்கிப் பிடித்தார்கள். அந்த குழுவின் நோக்கம் குறைஷி கோத்திரத்தை தடுத்து நிறுத்துவதாகும். இந்தக் குழுவில் 200 பேர் இருந்தனர். சஹாபாக்களின் ஜமாஅத் ராபிக் என்ற பள்ளத்தாக்கில் அந்தக் குழுவை சந்தித்தனர். இந்தக் குழு ஒரு வணிகக் குழு அல்ல. அவர்களிடம் போர்க்கான பொருட்களும் இருந்தன. சென்ற இரு குழுவினருக்கும் இடையில் அம்புகள் வீசப்பட்டதுடன் வேறு எந்த சண்டையும் நடக்கவில்லை. சண்டைக்கான வேறு எந்த விஷயமும் நடக்கவில்லை. வியூகம் அமைக்கவும் இல்லை. மிக்தாது பின் அஸ்வத் மற்றும் உவைனா பின் கஸ்வான் என்ற இருவரும் இணை வைப்பவர்களின் தரப்பிலிருந்து முஸ்லிம்களிடம் வந்து சேர்ந்து கொண்டனர். இருவரும் முன்னரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

இணை வைப்பவர்கள் முஸ்லிம்களைக் கண்டு அஞ்சியவாறு திரும்பிச் சென்றனர். முஸ்லிம்களும் கூட அவர்களைப் பின்தொடரவில்லை. அதற்கான காரணம், போர் செய்வதாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபரின்போது மிஸ்தாஹ் மற்றும் இப்னு இல்யாஸ் இருவருக்கும் 50 வஸக் (அளவு) கிலா வழங்கினார்கள். இவர்கள் 56 வயதில் ஹிஜ்ரி 34 –ல் உஸ்மான் உடைய கிலாஃபத் காலத்தில் வஃபாத் ஆனார்கள் என்றும் கூறப்படுகிறது. மேலும் அன்னார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் நடந்த ஸபீன் போரில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் சேர்ந்து கலந்து கொண்டார்கள். அதே வருடம் ஹிஜ்ரி 37–ல் வஃபாத் ஆனார் என்று கூறப்படுகிறது.

ஹஸ்ரத் மிஸ்தாஹ் அவர்கள் யார் என்றால் அவரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உணவளித்து கவனித்து வந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டபோது அவ்வாறு அவதூறு கூறியவர்களில் ஹஸ்ரத் மிஸ்தாஹ்வும் இணைந்து விட்டார். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வருங்காலத்தில் நாம் இவருக்கு எந்த உதவியும் செய்யப்போவதில்லை என்று சத்தியம் செய்தார்கள்.

பிறகு இது குறித்து திருக்குர்ஆனில் இந்த வசனம் இறங்கியது.

وَلَا یَاۡتَلِ اُولُوا الۡفَضۡلِ مِنۡکُمۡ وَالسَّعَۃِ اَنۡ یُّؤۡتُوۡۤا اُولِی الۡقُرۡبٰی وَالۡمَسٰکِیۡنَ وَالۡمُہٰجِرِیۡنَ فِیۡ سَبِیۡلِ اللّٰہِ ۪ۖ

وَلۡیَعۡفُوۡا وَلۡیَصۡفَحُوۡا ؕ اَلَا تُحِبُّوۡنَ اَنۡ یَّغۡفِرَ اللّٰہُ لَکُمۡ ؕ وَاللّٰہُ غَفُوۡرٌ رَّحِیۡمٌ

உங்களில் வசதி படைத்தவர்கள் ஒருபோதும் ஏழைகள், வறியோர், இறை வழியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்யாதீர்கள். அவர்களை மன்னிக்க வேண்டும். கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிப்பதை விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (24:23)

எவ்வாறிருப்பினும் இந்த வசனம் இறங்கியதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனே அம்மனிதருக்கு உணவளித்து உதவிகளைத் தொடர்ந்து செய்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷாவை அல்லாஹ் குற்றமற்றவர் என்ற வசனத்தை இறக்கியதும் பழி கூறியவர்களுக்கு தண்டனையும் கொடுக்கப்பட்டது. சில அறிவிப்புகளின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறிய சஹாபிகளுக்கு சவுக்கடி கொடுக்கச் செய்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் மிஸ்தாஹ்வும் ஒருவராவார்.

சஹீஹ் புகாரியின் அறிவிப்பின்படி ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறப்பட்ட சம்பவம் பற்றி வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

அன்னார் ஒரு தாக்குதல் நடந்தபோது மனைவியர்களுக்கு மத்தியில் சீட்டுக் குலுக்கிப் போட்டபோது எனது பெயர் வந்தது. நான் அன்னாருடன் சென்றேன். அப்போது பர்தா அணிய வேண்டும் என்ற கட்டளை அருளப்பட்டிருந்தது. நான் மறைவுக்குள் இருந்தேன். ஒட்டகத்தின் மேல் பல்லக்கு போன்று செய்யப்படும். நாலாபுறமும் திரையிடப்பட்டிருக்கும். இவ்வாறு நாங்கள் பயணத்தில் சென்றோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போரிலிருந்து திரும்பினார்கள். நாங்கள் மதீனாவுக்கு அருகில் வந்து விட்டோம். ஓர் இரவு அன்னார் தங்குமாறு கட்டளையிட்டார்கள். மக்களிடம் அறிவிக்கப்பட்டதும் நான் படையை விட்டு தூர விலகி இயற்கையின் தேவைக்காகச் சென்றேன். திரும்பியபோது எனது கழுத்தில் இருந்த விலை மதிப்புள்ள கருப்புக் கற்கள் பதிக்கப்பட்ட மாலை விழுந்து விட்டது தெரிய வந்தது. நான் திரும்பிச் சென்று எனது மாலையைத் தேடினேன். அதில் எனக்கு சிறிது நேரம் ஆகிவிட்டது. அப்போது எனது ஒட்டகத்தை ஆயத்தம் செய்பவர்கள் எனது பல்லக்கை தூக்கி ஒட்டகத்தின் மீது வைத்து விட்டனர். அது அப்போது காலியாக இருந்தது. நான் அதில் இருக்கிறேன் என்று அவர்கள் கருதிக் கொண்டனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் மெலிந்தவளாக இருந்தேன். அவர்கள் அதனை தூக்கி ஒட்டகத்தில் வைத்தனர். பிறகு செல்ல ஆரம்பித்தனர். முழு படையும் அந்த இடத்தைக் கடந்து சென்ற பிறகு நானும் எனது மாலையைத் தேடி எடுத்து விட்டேன். நான் திரும்பி வந்தேன். அங்கு எவரும் இல்லை. உடனே நான் எனது பல்லக்கு இருந்த அதே இடத்தில் இருந்தேன். அவர்கள் என்னை காணாமல் திரும்பி வருவர் என்று நினைத்து அமர்ந்து விட்டேன்.

இந்நிலையில் என் கண்கள் அயர்ந்து தூங்கி விட்டேன். சப்வான் பின் முஅத்தல் சக்வானி படைகளுக்குப் பின்னால் இருந்தார். படை சென்ற பிறகு எதுவும் விடுபடவில்லையே என்று பார்த்து செல்வதற்காக நின்றார். அவர் நான் தங்கி இருந்த இடத்திற்கு வந்தார். நான் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து இன்னாலில்லாஹ் என்று கூறினார். அவர் இன்னாலில்லாஹ் என்று கூறியதைக்கேட்டு நான் எழுந்து விட்டேன். அவர் தனது ஒட்டகத்தை எனக்கு அருகில் கொண்டு வந்தார். நான் அதில் ஏறி பயணம் செய்தேன். அவர் அந்த ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டே சென்றார். மக்கள் நண்பகல் நேரம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் நாங்கள் மக்களை சென்று சேர்ந்தோம். அதில் அழியக் கூடியவர்கள் அழிந்து விட்டனர். அதாவது இதனை குறித்து அவதூறு கூறுபவர்கள் அவதூறு கூறத் தொடங்கினர்.

இந்த அவதூறுகளில் தலைவன் அப்துல்லாஹ் பின் அபீ ஸலூல் என்பவன் ஆவான். நாங்கள் மதீனறோம். அங்கு ஒரு மாதம் நான் நோயுற்றிருந்தேன். அவதூறு கூறுபவர்களின் வார்த்தைகளை வைத்து மக்கள் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். முன்பு நான் நோயுற்றிருந்த நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை கவனித்து வந்ததைப் போன்று இப்போது என்னை கவனிக்கவில்லை. அன்னார் உள்ளே வருவார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவார்கள். அவள் எப்படி இருக்கிறார்? என்று யார் மூலமாவது கேட்பார்கள். எனக்கு அப்போது என் மீது கூறப்பட்ட வழி அவதூறு பற்றி ஒன்றும் தெரியாது.

ஒரு இரவில் நானும் உம்மே மிஸ்தா பின்த் அபு ருஹ்ம் இருவரும் செல்லும்போது அவர்களது ஆடையில் மாட்டிக் கொண்டு தடுமாறி கீழே விழுந்தார்கள். பிறகு மிஸ்தாஹ் பேறிழந்தான் என்று கூறினார்கள். என்ன தீய வார்த்தையைக் கூறுகிறீர்கள்? என்று நான் கூறினேன். பத்ர் போரில் கலந்து கொண்டவரைப் பார்த்து அவ்வாறு கூறுகிறீர்களா? என்றேன்.

அவர் கூறினார்: மறதிக்கார பெண்ணே! மக்கள் இட்டுக் கட்டுவதை நீ கேட்கவில்லையா? என்று கூறியவாறு மக்கள் அவதூறு கூறுவதைப் பற்றி கூறினார். இந்த ஆட்சேபனை உம்மீது வைக்கப்படுகிறது என்று கூறினார். நான் அப்போதுதான் நோயிலிருந்து எழுந்து இருந்தேன். இதனை கேட்டு எனது நோய் அதிகமானது. நான் எனது வீட்டிற்கு திரும்பினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடத்தில் வந்தார்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினார்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். நான், எனது பெற்றோர் வீட்டிற்குச் செல்ல எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு அன்னார் அனுமதி தந்தார்கள். நான் எனது பெற்றோரிடம் வந்தேன். எனது தாயாரிடம் மக்கள் என்ன கூறுகிறார்கள்? என்று கேட்டேன். எனது தாயார், மகளே! அதனைக் கேட்டு நீ வருத்தப்படாதே. அமைதியாக இரு. ஒருவரிடம் ஓர் அழகிய பெண் இருந்து அதனை அவர் அன்பு கொண்டிருக்கும் நிலையில் அவளைப் பற்றி எந்த அவதூறான வார்த்தைகளையும் மக்கள் கூறாமல் இருக்கும் மக்கள் மிகவும் குறைவாகும் என்றார்.

அவர் கூறுகிறார்: பிறகு நான் அவ்வாறே இரவைக் கழித்தேன். எதுவரை என்றால் காலை வரை எனது கண்களிலிருந்து கண்ணீர் நிற்கவே இல்லை. இரவு முழுவதும் எனக்கு தூக்கம் வரவில்லை. நான் அழுது கொண்டே இருந்தேன். காலை எழுந்ததும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அலி பின் அபீதாலிப், உஸாமா பின் ஸைத் ஆகியோரை அழைத்தார்கள். அவ்விருவரிடமும் தமது மனைவியை தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக அழைத்தார்கள். அப்போது உஸாமா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணை! ஆயிஷா உங்களது மனைவி ஆவார்கள். உங்கள் மனைவியாரிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் நான் அறியவில்லை. எந்த குறைபாட்டையும் காணவில்லை. ஆனால் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் உங்களுக்கு எந்த குறைவையும் வைக்கவில்லை. இவர்களைத் தவிர மேலும் அதிகமான பெண்கள் இருக்கின்றனர் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் அலி அவர்கள் ஆயிஷாவின் பணிப் பெண்ணிடம் இவர்கள் எத்தகையவர் என்று கேளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பரிரா என்ற பணிப்பெண்ணை அழைத்து கேட்டார்கள். பரிரா! ஹஸ்ரத் ஆயிஷாவிடம் சந்தேகப்படும் ஏதாது செயலைப் பார்த்துள்ளாயா? என்று கேட்டார்கள். அதற்கு பரிரா, ஒருபோதும் இல்லை. உங்களை உண்மையுடன் அனுப்பிய இறைவன் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் ஆயிஷாவிடம் எந்தவொரு குறையையும் கண்டதில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த மனைவி குறித்து எனக்கு துன்பம் தருபவரை எவர் கவனிப்பார். நான் இறைவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். நான் எனது மனைவியிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் பார்க்கவில்லை. இதனை கூறியதும் சஅத் பின் மஆஸ், இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுக்காக இதற்கு பழிவாங்குவேன். இந்த பழியைக் கூறுபவர் அவ்ஸ் கோத்திரத்தவர் என்றால் அவரது தலையைக் கொய்வேன். அவர் எமது சகோதரர்களான கஸ்ரஜ் கோத்திரத்தவர் என்றால் நீங்கள் கட்டளையிடுவதை செய்வோம் என்று கூறினார்கள். இவர் இவ்வாறு கூறியதும் சஅத் பின் உபாதா எழுந்தார். அவர், நீர் தவறாகக் கூறுகிறீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் எமது கோத்திரத்தைக் கொல்ல முடியாது. கொல்லவும் மாட்டீர். கொல்லவும் முடியாது என்றார். இவ்வாறு அங்கு வாக்குவாதம் தொடங்கியது. ஒருவர் மற்றவருக்கிடையில் சண்டை மூட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை சமாதானம் செய்தார்கள். உடனே அவர்கள் அமைதி அடைந்தனர்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: நான் நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தேன். எனது கண்ணீரும் நிற்கவில்லை. எனக்கு தூக்கமும் வரவில்லை. எனது தாயும் தந்தையும் என் அருகில் வந்தனர். நாங்கள் இந்த நிலையில் இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே வந்து அமர்ந்தார்கள். என் மீது அவதூறு கூறப்பட்ட நாள் முதல் அன்னார் என் அருகில் அமரவில்லை. ஒரு மாதம் காத்திருந்தார்கள். ஆனால் என் தொடர்பாக அன்னாருக்கு எந்த வஹீயும் வரவில்லை.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அன்னார் ஷஹாதத் ஓதியவாறு என்னிடம் கூறினார்கள். ஆயிஷாவே! உம்மைப் பற்றி எனக்கு ஒரு விஷயம் வந்து சேர்ந்துள்ளது. நீங்கள் குற்றமற்றவர் எனில், அல்லாஹ் உம்மை குற்றமற்றவர் ஆக்கி விடுவான். உம்மிடம் ஏதாவது பலவீனம் ஏற்பட்டிருந்தால் அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுங்கள். அவனிடம் தவ்பா செய்யுங்கள். அடியான் தனது பாவத்தை ஒத்துக் கொண்டான் என்றால் அவனிடம் தவ்பா செய்தான் என்றால் அல்லாஹ்வும் அவன் மீது கருணை காட்டுகிறான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) தமது தந்தையார் அபூபக்ரிடம் கூறினார்கள்: என் தரப்பில் நீங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பதில் கூறுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர், இறைவன் மீது ஆணையாக. எனக்கு என்ன பதில் சொல்வது

என்றே தெரியவில்லை என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ஆயிஷா, என் சார்பாக பதில் கூறுங்கள் என்று தமது தாயாரிடம் கூறினார்கள். அதற்கு, இறைவன் மீது ஆணையாக என்ன பதில் கூறுவது என்றே எனக்கு தெரியவில்லை என்று தாயாரும் கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக. நீங்கள், மக்கள் எதனைக் குறித்து பேசுகிறார்களோ அதனை கேட்டுள்ளீர்கள் என்று தெரிகிறது. என் மீது பெரும் அவதூறு கூறப்பட்டுள்ளது. அது உங்கள் உள்ளத்திலும் அமர்ந்து விட்டது. நீங்கள் அதனை சரியானது என்று கருதி விட்டீர்கள். ஆனால் நான் கூறுகிறேன். நான் குற்றமற்றவள். அத்தகைய செயலைச் செய்யவில்லை. நான் உண்மையில் குற்றமற்றவள். நீங்கள் இதில் என்னை உண்மையாளவள் என்று கருதவில்லை. மேலும் நான் இதனைக் கூறுகிறேன். அல்லாஹ் நன்கறிகிறான். நான் குற்றமற்றவள். நான் அத்தகைய தீய செயல் எதுவும் செய்யவில்லை. எனது உறுதிமொழியை நீங்கள் உண்மை என்று கருதவில்லை என்றாலும் சரி, அல்லது நீங்கள் உண்மை என்று ஏற்றாலும் சரி நான் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் யஃகூப் (அலை) அவர்களுடைய வார்த்தையையே கூறுவேன். பொறுமையை மேற்கொள்வதே சிறந்தது. அவனிடமே உதவி தேட வேண்டும் என்று கூறி விட்டு நான் அந்த இடத்தை விட்டு அகன்று விட்டேன். எனது படுக்கைக்கு வந்து விட்டேன். அல்லாஹ் என்து குற்றமின்மையை வெளிப்படுத்துவான் என்று நம்பினேன்.

ஹஸ்ரத் ஆயிஷா கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அன்னார் தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுவதற்குள் அன்னாருக்கு வஹி இறங்கியது. வஹி இறங்கும்போது அன்னார் புன்முறுவல் செய்தார்கள். பெருமனார் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து. ஏனெனில் அல்லாஹ் உம்மை குற்றமற்றவளாக்கி விட்டான் என்று கூறினார்கள்.

அப்போது எனது தாயார் என்னிடம், எழுந்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல் என்றார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒருபோதும் செல்ல மாட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் நன்றி செலுத்தவும் மாட்டேன் என்றேன். மேலும் எவர்கள் அவதூறு கூறினார்களோ அவர்களும் உங்களில் உள்ளவர்கள் தான் என்று அல்லாஹ் வழி வழங்கினான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் தனது சீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஒரு சம்பவத்தை கூறுகிறார்கள். அதிகப்படியாக அன்னார் கூறி விஷயம் என்னவென்றால், அங்கே புகாரியில் இவ்வாறு வந்தது. அவரது கைகளில் காலை வைத்து ஏறி அமர்ந்தேன் என்று வந்தது. இங்கு, அவர் ஒட்டகத்தை என் முன் நிறுத்தி தமது கால்களால் அதன் முட்டியைப் பிடித்துக் கொண்டார். திடீரென்று அது எழுந்து விடாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்தார் என்று வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி மேலும் அதிகப்படியாக இவ்வாறு கூறுகின்றாக்ரள்: ஹஸ்ரத் ஆயிஷா அவர்களுக்கு எதிராக எழுந்த அந்த கூச்சல் எவ்வளவு பெரியது என்றால் சில சஹாபிகளும் கூட அறியாமையால் அதில் இணைந்தனர். அவர்களுள் ஒருவர் ஹஸ்ஸான் பின் ஸாபித்; இரண்டாமவர் மிஸ்தாஹ் பின் உஸாஸா. அதேபோன்று ஒரு பெண் சஹாபி ஜம்னா பின்த் ஜஹ்ஷ். இவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மைத்துனி ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தால் கடும் துயரம் ஏற்பட்டது. அந்த வேதனையில் நோயுற்றார்கள். இந்த நயவஞ்சகர்களின் கூற்றைப் பற்றி தெரிய வந்தபோது அந்த நோய் மேலும் அதிகமானது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷாவின் மீது அவதூறு கூறியதற்காக மூன்று பேருக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. ஒன்று, ஹஸ்ஸான் பின் ஸாபித் ஆவார். அடுத்து, மிஸ்தாஹ். இவர் ஹஸ்ரத் அபூபக்ர் உடைய சிற்றன்னை மகன் ஆவார். பிறகு ஒரு பெண்ணுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டது. சுனன் அபீதாவூதில் இந்த தண்டனை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் சிலரது பார்வையில் தண்டனை கொடுக்கப்பட்டது. சிலரது பார்வையில் தண்டனை கொடுக்கப்படவில்லை. ஆனால் தண்டனை கொடுக்கப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும் அவர்கள் சஹாபிகள் ஆவர். அவர்களை அல்லாஹ் மன்னித்து விட்டான். உலகத் தண்டனை கிடைக்க இருந்தது; கிடைத்து விட்டது. மேலும் பிறகு வந்த போர்களில் கலந்து கொண்டனர். இவர்கள் பத்ரில் கலந்து கொண்ட சஹாபிகள் ஆவர். அவர்களுக்கு பெரிய அந்தஸ்து உள்ளது. இவர்களின் முடிவை அல்லாஹ் நன்றாக ஆக்கினான். அவர்களின் அந்தஸ்தை நிலைநாட்டினான்; நிலை நிறுத்தினான். அல்லாஹ் அவர்களின் தகுதிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**